**கவனிக்க** .- *2014.12.26 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1896 - 2015 ජනවාරි මස 02 වැනි සිකුරාදා - 2015.01.02

*1896 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 20 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 21 |
| அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| ஏல விற்பனைகள் | 26 |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2015, சனவரி மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, சனவரி மாதம் 09 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் உரிமை கோரப்படாத அரசுடைமையாக்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் முத்திரையிடப்பட்ட விலைமனு மூலம் விற்பனை செய்வதற்காக மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தினால் கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் கோரல் - 2015

*வாழைச்சேனை மாவட்ட/நீதிவான் நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் உரிமை கோரப்படாத அரசுடைமையாக்கப்பட்ட மோட்டார் லொறி, உழவு இயந்திரம் மற்றும் மோட்டார் சைக்கிளுக்கான பகிரங்க மூடிய விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் விற்பனை செய்யப்பட இருக்கின்றது. இதற்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 2015 ஆம் ஆண்டு தை மாதம் 21 ஆந் திகதி பி. ப. 3.00 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*விண்ணப்பங்கள் மேல் நீதிமன்ற நீதிபதி மேல் நீதிமன்றம், மட்டக்களப்பு எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கலாம் அல்லது மேல் நீதிமன்றத்தின் கணக்குப் பிரிவில் உள்ள கேள்விப்பெட்டியில் இடப்பட வேண்டும். கடித முகப்பின் மேல் மூலையில் "வாழைச்சேனை மாவட்ட/நீதிவான் நீதிமன்றத்தினால் அரசுடைமையாக்கப்பட்ட வாகனத்திற்கான விலைமனு" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.*

*கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் மேல் நீதிமன்ற முத்திரை பொறிக்கப்பட்ட மற்றும் கணக்காளரின் கையொப்பம் இடப்பட்ட படிவங்களில் மாத்திரம் விண்ணப்பிக்கப்பட வேண்டும்.*

*கேள்விப்பத்திர நடைமுறையூடாக விற்பனை செய்யப்படவுள்ள மோட்டார் வாகனங்கள் தொடர்பில் உரிமை கோருபவர்கள் எவரும் இருப்பின் விலைமனுக் கோரும் இறுதித் திகதியில் பி. ப. 3.00 மணிக்கு முன்னர் தமது உறுதிப்படுத்தப்பட்ட உரிமைக் கோரிக்கையினை முன்வைக்க முடியும். தவறும் பட்சத்தில் அவை தொடர்பாக எந்த நடவடிக்கையும் ஏற்கப்பட மாட்டாது என்பதனை அறியத்தருகின்றேன்.*

*மோட்டார் லொறி, உழவு இயந்திரம் மற்றும் மோட்டார் சைக்கிள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியான விலைமனு சமர்ப்பிக்கப்பட வேண்டும். இதற்காக மீள் செலுத்தப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் நூறு (100) ரூபாவுடன் பின்வரும் அடிப்படையிலான வைப்புப் பணத்தினைச் செலுத்துதல் வேண்டும். இவ்விண்ணப்பப்பத்திரம் வழங்குதல் 2015, சனவரி 20 ஆந் திகதியன்று பி. ப. 3.00 மணியுடன் நிறுத்தப்படும்.*

| *தொடர் இலக்கம்* | *வாகன விபரம்* | *வகை* | *வழக்கு இலக்கம்* | *விற்பனைக்காக வழங்கப் பட்ட இலக்கம்* | *வைப்புக் கட்டணம்* |
|---|---|---|---|---|---|
| *1.* | *மோட்டார் சைக்கிள் 1* | Hero Honda CBZ MG - 4080 | B/310/07 | MC/VCH/01/2015 | 1,000 0 |
| *2.* | *மோட்டார் லொறி 1* | Mitsubishi Model Canter 227 – 8640 | 16230/F/11 | MC/VCH/02/2105 | 5,000 0 |
| *3.* | *உழவு இயந்திரம் 1* | Mahendra Model 575DI 49-0182 | 16643/PC/11 | MC/VCH/03/2015 | 1,000 0 |

*குறிப்பிட்ட கால நேரத்திற்குள் பெற்றுக்கொள்ளப்படும் முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 21 ஆந் திகதியன்று பி. ப. 3.00 மணிக்கு பிரசன்னமான கேள்விமனு சமர்ப்பித்தவர்கள் முன்னிலையில் மேல் நீதிமன்ற சம்பாத்திய குழுவினால் திறக்கப்படும்.*

*விலைமனுவின் மூலம் கூடிய விலையைக் குறிப்பிட்டுச் சமர்ப்பித்த விண்ணப்பதாரிகளுக்கு அவ்வாகனத்தை விற்பனை செய்வதற்கான அங்கீகாரத்தினை மேல் நீதிமன்ற சம்பாத்திய குழு பிறப்பிக்கும். இதன் அடிப்படையிலான விற்பனை நடைமுறையினை குறிப்பிட்ட நீதிமன்றம் மேற்கொள்ளும்.*

*விலைமனு கோரலின் ஊடாக விற்பனை செய்யப்படவிருக்கும் மோட்டார் வாகனங்களை நேரடியாக சமுகமளித்து கடமை நாட்களில் மு. ப. 10.00 மணி தொடக்கம் பி. ப. 2.30 மணிவரைக்கும் வாழைச்சேனை மாவட்ட/நீதிவான் நீதிமன்ற பதிவாளருடன் தொடர்பு கொண்டு பார்வையிடலாம்.*

*விற்பனை செய்யப்படவிருக்கும் மோட்டார் வாகனங்களுக்கு மதிப்பீட்டுப் பெறுமதி கணிக்கப்பட்டுள்ளதால் சமர்ப்பிக்கப்பட்ட விலை மனுக்களில் குறிப்பிட்ட பெறுமதி குறைவானதாகக் காணப்படும் சந்தர்ப்பங்களில் அவ்வாகனங்களினை விற்பனை செய்வதிலிருந்து நிறுத்தி வைப்பதற்கு பெறுகைக் குழுவிற்கு பூரண அதிகாரம் உண்டு.*

*விற்பனை செய்யப்படும் வாகனம்/வாகனங்களைப் பணம் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்ற பின்னர் உடனடியாக நீதிமன்ற வளாகத்திலிருந்து அகற்றப்படுதல் வேண்டும். மேலும் எல்லாக் கொடுப்பனவுகளும் பணமாகச் செலுத்தப்படுதல் வேண்டும். காசோலைக் கொடுப்பனவு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.*

மேற்படி முடிய விலைமனு ஊடான விற்பனை தொடர்பான இறுதித் தீர்மானம் மட்டக்களப்பு மேல் நீதிமன்றப் பெறுகைக் குழுவுக்கே உரித்தானதாகும்.

வி. சந்திரமணி,
மேல் நீதிமன்ற நீதிபதி,
மேல் நீதிமன்றம்,
மட்டக்களப்பு.

மேல் நீதிமன்றம்,
மட்டக்களப்பு.

1-12

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : எட்வைஸ் இன்டர்நஷனல் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 102631
கூட்டிணைப்புத் திகதி : 2014.12.05
பதிவு முகவரி : இல. 92, பொல்கொல்லவத்தை, பொல்கொல்ல

கம்பனிச் செயலாளர்.

1-04

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனிகள் பதிவுசெய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனி பெயர் : மெடிவர்த் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவுசெய்யப்பட்ட முகவரி : இல. 80, கிரெஸ்ஸகல றோட், கண்டி
பதிவிலக்கம் : பீவீ 102223
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 18.11.2014

பணிப்பாளர்.

1-183

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ், ''எஜீஸ்ஃபன்ட் மெனேஜ்மென்ட் (பிறைவேட்) லிமிட்டெட்'' எனும் கம்பனியின் பெயர், 2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 15 ஆந் திகதி முதல் ''எடிஷன் (பிறைவேட்) லிமிட்டெட்'' என மாற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் முன்னைய பெயர் : எஜீஸ்ஃபன்ட் மெனேஜ்மென்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் புதிய பெயர் : எடிஷன் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 9306
கம்பனியின் பதிவுசெய்யப்பட்டுள்ள முகவரி : இல. 53/2, புத்கமுவ வீதி, இராஜகிரிய

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

1-179

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : புல்சித் ட்ரேடிங் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 100945
கூட்டிணைப்புத் திகதி : 2014.09.18
பதிவு முகவரி : இல. 76/3, பிலியந்தல வீதி, மஹரகம

கம்பனிச் செயலாளர்.

1-58

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : புரோலைன் என்ஜினியரிங் சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

*பதிவு இலக்கம்* : பீவீ 100944
*கூட்டிணைப்புத் திகதி* : 2014.09.18
*பதிவு முகவரி* : இல. 76/3, பிலியந்தல வீதி, மஹரகம

கம்பனிச் செயலாளர்.

1-57

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : வெல்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 102078
*கூட்டிணைப்புத் திகதி* : 2014.11.12
*பதிவு முகவரி* : இல. 29ஏ, அல்பன்ஸ் பிளேஸ், கொழும்பு 4

கம்பனிச் செயலாளர்.

1-44

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப் படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : செடர் கெபிட்டல் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 101589
*பதிவு முகவரி* : இல. 62, வஜிரா வீதி, கொழும்பு 4

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

1-43

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : எக்செல் எண்டர்பிரைஸ் கொன்கிரீட் நெஸ்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 96318
*கூட்டிணைப்புத் திகதி* : 2014.01.01
*பதிவு முகவரி* : பொத்தெவெல, பாதுராகொட

கம்பனிச் செயலாளர்.

1-130

---

### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : ஐகொன் மீடியா (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 102298
*பதிவு முகவரி* : 2 ஆம் மாடி, மக்லரன்ஸ் கட்டிடம், இல. 123, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 4
*கூட்டிணைப்புத் திகதி* : 2014, நவெம்பர் 20

கம்பனிச் செயலாளர்.

1-160

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : எம் ஏ பில்டர்ஸ் அன்ட் பெப்ரிகேட்டர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 101585
*கூட்டிணைப்புத் திகதி* : 2014.10.20
*பதிவு முகவரி* : இல. 10, தெஹிபிட்டிய, உக்குவெல

கம்பனிச் செயலாளர்.

1-59

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனி பின்வருமாறு கூட்டிணைக்கப் பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : மைஆமி கன்பெக்ஷனறீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி பதிவு இலக்கம்* : பீவீ 102689
*கம்பனியின் முகவரி* : இல. 1252, மாத்தளை வீதி, அலவதுகொட, கண்டி

சட்டத்தரணி ஜே. எம். அஷ்ரப்,
கம்பனிச் செயலாளர்.

இல. 256, மாத்தளை வீதி,
அக்குரணை.

1-74

## அறிவித்தல்

பொதுக்கம்பனியாக பெயர் மாற்றம்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 11(5) ஆம் பிரிவின் கீழ் கூட்டிணைக்கப்பட்டதும் 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் இல. 184/2, கவோலின் றிஃபைனறி வீதி, வெரஹர, பொரலஸ்கமுவவில் பதிவு அலுவலகத்தைக் கொண்டதுமான கொன்சோலிடேடெட் பிசினெஸ் சிஸ்ரெம்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் (கம்பனி இலக்கம் பீவீ 5851) சட்டத்தின் 28 ஆம் பிரிவுக்கு அமைய 2014.11.03 இலிருந்து அதன் பெயரை பின்வருமாறு மாற்றியுள்ளது :-*

கொன்சோலிடேடெட் பிசினெஸ் சிஸ்ரெம்ஸ் லிமிட்டெட், சட்டத்தின் 11(2) ஆம் பிரிவுக்குஅமைவானது. 184/2, கவோலின் றிஃபைனறி வீதி, வெரஹர, பொரலஸ்கமுவ.

*பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,*

*பிசினெஸ்மேட் (பிறைவேட்) லிமிட்டெடட்,*
*கம்பனிச் செயலாளர்கள்.*

*1-75*

---

## பொறுப்பு வரையறுத்த கம்பனியின் கூட்டிணைப்பு தொடர்பான பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : ஓவர்ஸ்டொக் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 101893
*திகதி* : 03.11.2014
*கம்பனியின் பதிவு முகவரி* : இல. 5, சார்ள்ஸ் பிளேஸ், கொழும்பு 3

பிசினெஸ்மேட் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 45, பிறேபுறூக் வீதி,
கொழும்பு 2,
2014, திசெம்பர் 02.

*1-76*

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : கண்டி கெலி ட்ரேடிங் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 102632
*கூட்டிணைப்புத் திகதி* : 2014, திசெம்பர் 05
*பதிவு முகவரி* : இல. 3/1, கண்டி வீதி, கெங்கல்ல

*கம்பனிச் செயலாளர்.*

*1-03*

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : றெட்லைன் லொஜிஸ்டிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு அலுவலகம்* : இல. 193/3, கொடிகஹவத்த, முல்லேரியாவ, புதிய நகரம், கொழும்பு
*கூட்டிணைப்புத் திகதி* : 2014.11.18
*பதிவு இலக்கம்* : பீவீ 102197

*கம்பனிப் பணிப்பாளர்.*

*1-87*

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : சிலோன் சந்க்டேர்ரீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 102417
*பதிவு முகவரி* : இல. 50, பான்ஸ் பிளேஸ், கொழும்பு 7
*கூட்டிணைப்புத் திகதி* : 26.11.2014

*கம்பனிச் செயலாளர்.*

*1-94*

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி 2014, திசெம்பர் 4 ஆந் திகதி கூட்டிணைக்கப் பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : றியல்ஸ்டேட் இன்டெலிஜன்ஸ் யுனிட் (பிறைவேட்) லிமிட்டெட்

*பதிவிலக்கம் : பீவீ 102613*

*பதிவு முகவரி : இல. 3/1, 39, எல்பர்ட் இடம், கொழும்பு*

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

சிரங்கா ரணசிங்க அமிர்தய்யா,
கம்பனிச் செயலாளர்.

1-133

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கிரீ லங்கா (பீவீரீ) எல்ரீடி எனும் கம்பனி 2014.10.15 ஆந் திகதி கம்பனிகள் பதிவுச் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்டதாக அறிவிக்கப் பட்டுள்ளது. கம்பனி இலக்கம் பீவீ 101519 ஆம் புதிய கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி இல. 79ஏ, தர்மபால மாவத்தை, கொழும்பு 7.

ஜோர்ஜ் ஸ்டுவர்ட் அன்ட் கம்பனி
லிமிட்டெட்,
புதிய கம்பனிக்கான செயலாளர்கள்.

ஸ்டுவர்ட் ஹவுஸ்,
இல. 45, சனாதிபதி மாவத்தை,
கொழும்பு 1.

1-129

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் முன்னைய பெயர்* : பவர்டெக் என்ஜினியரிங் (பிறைவேட்) லிமிட்டெட்

*கம்பனியின் இலக்கம்* : பீவீ 69165

*கம்பனியின் பதிவு அலுவலக முகவரி* : இல. 231/2, இலங்கை வங்கிக் கட்டிடம், பிரதான வீதி, பத்தரமுல்லை

*கம்பனியின் புதிய பெயர்* : எம். எல். விரா இன்டர்நஷனல் (பிறைவேட்) லிமிட்டெட்

ஆர். கே. எல். எஸ். கோர்ப்பரேட்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்.

1-124

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இரத்மலானை, சிரிமல் உயன, ரத்மல் மாவத்தை, இல. 18 இல் வதியும் தென் அவுஸ்திரேலியா, வோக்லி ஹயிட்ஸ், பிசினெஸ் ட்றைவ், இல. 52 ஐச் சேர்ந்த பாலகே சமந்தி சதானா தர்மபந்து (விவாகத்தின் முன்) த சில்வா (இலங்கை கடவுச்சீட்டு இல. N 1859020) ஆகிய நான், கொழும்பு 5, உத்யான வீதி, இல. 351 இல் வதியும் மாகலகே ஜானகி ஜசிந்தா பெரேரா (தே. அ. அ. இல. 545562103V) என்பவருக்கு என்னால் அதிகாரமளிக்கப்பட்ட 2009, யூன் 12 ஆந் திகதியன்று தென் அவுஸ்திரேலியாவில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கொன்சல் ஆனந்த கே. ஈரியகம அவர்களால் உறுதிப்படுத்தப்பட்டு, நாட்குறிப்பில் இல. 4150 இன்கீழ் 2009.06.30 ஆந் திகதி பதிவுசெய்யப் பட்ட அற்றோணித் தத்துவம் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இத்தால் இரத்துச்செய்யப்படுகின்றதென்பதையும், இதன் பின்னர் அந்த அற்றோணித் தத்துவத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் எவ்விதமான கொடுக்கல் வாங்கல்களுக்கும் நடவடிக்கைகளுக்கும் நான் பொறுப்பாக மாட்டேன் என்பதையும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பாலகே சமந்தி சதானா தர்மபந்து
(விவாகத்தின் முன்) த சில்வா.

1-46

---

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொழும்பு 9, தெமட்டகொடை, பேஸ்லைன் வீதி, 270/39 ஆம் இலக்கத்தில் வசிக்கும் மற்றும் 821833752V ஆம் இலக்க தேசிய ஆள் அடையாள அட்டையின் உரித்தாளியான கீழே கையொப்பமிட்டுள்ள புலத் சின்ஹலகே நிதுஷன் நிலோஷனா ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருவது யாதெனில், எனது தத்துவக்காரரான ஹெட்டிகொட பிட்டிபன (வடக்கு), கொடகம ஹோமாகம, 284 ரீ/ஐஈ ஆம் இலக்க முகவரியை வதிவிடமாகக் கொண்டவரும் 638441683V ஆம் இலக்க தேசிய ஆள் அடையாள அட்டையின் உரித்தாளியுமான மொறட்டுவாகே ஷம்பா வை 584 ஆம் இலக்கம் கொண்ட 2009.06.20 ஆந் திகதியன்று கொழும்பு பிரசித்த நொத்தாரிசு டீ. எம்புல்தெனிய அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட குறித்த அற்றோணித் தத்துவத்தை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இரத்துச் செய்து இல்லாதொழித்து விடுகிறேன். மற்றும் குறித்த இந்தத் திகதியிலிருந்து குறித்த மொறட்டுவகே ஷம்பா என் தத்துவக்காரராக இருப்பது நிறுத்தப் பட்டுள்ளது. மற்றும் அதன் பின்னராக அவரால் ஏற்படுத்திக்கொள்ளப் பட்ட ஏதேனும் கொடுக்கல் வாங்கல்கள் பற்றி நான் பொறுப்புக் கூற மாட்டேன்.

புலத் சின்ஹலகே நிதுஷன் நிலோஷனா.

1-09

---

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மற்றும் அனைவருக்கும் அறியத்தருவதாவது, இல. 57/2, சீனகொரொடுவ மெத வீதி, காலி எனும் இடத்தில் வதியும் ஹெட்டி ஆரச்சிகே தொன் சந்திரலால் பிரியந்த ஆகிய என்னால் இல. 57/2, சீனகொரொடுவ மெத வீதி, காலியில்

வதியும் தெல்பாகொடகே தயாவதீ ஆகியவருக்கு பதியப்பட்டு அதிகாரமளிக்கப்பட்ட, காலி மாவட்ட பிரசித்திபெற்ற நொத்தாரிசான டீ. டபிள்யூ. விதாரண அவர்களால் பதியப்பட்ட 1191 ஆம் இலக்க 1997.09.01 ஆந் திகதியுடைய அற்றோணித் தத்துவத்தை இதன் மூலம் இரத்துச்செய்து அதிகாரமிழக்கச் செய்கிறேன்.

இனிமேல் மேற்குறிப்பிடப்பட்ட தெல்பாகொடகே தயாவதி என்பவரால் எனக்காக மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கை சம்பந்தமாகவும், உள்ளடக்கப்படும் எந்தவொரு ஒப்பந்தத்திற்கும் நான் பொறுப்பாளி அல்ல என்பதையும் இதன் மூலம் அறியத்தருகிறேன்.

ஹெட்டி ஆரச்சிகே தொன் சந்திரலால் பிரியந்த.

1-96

---

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

பத்தரமுல்ல, ஜயந்திபுர, லக்ஷபான மாவத்தை, 7/1 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த நிரோஷா தீபானி விக்கிரமசிங்க மறுபெயர் நிரோஷா தீபானி தர்மசேன (தே. அ. அ. இல. 756460307 V) ஆகிய என்னால் கடுவெல, கொரதொட்ட, 275/1 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த வாசல முதியன்சே லாகே நிசங்க வாசல பண்டார (தேசிய ஆள் அடையாள அட்டை இல. 680520089V) என்பவருக்கு வழங்கப்பட்டிருந்த பீ. ஏ. ஜயரத்ன கொழும்பு பிரசித்த நொத்தாரிசு அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014, யூலை 28 ஆந் திகதிய 810 ஆம் இலக்க அற்றோணித் தத்துவத்தை இன்று முதல் அழித்து இரத்துச்செய்கிறேன் என இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

நிரோஷா தீபானி விக்கிரமசிங்க
மறுபெயர் நிரோஷா தீபானி தர்மசேன.

1-32

---

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

ஜா-எல, கொட்டுகொட, 'இசுறு உயன' என்ற முகவரியில் வசிக்கும் பிலிப்பு மண்டடி கே அலைக்சாண்டர் பிரேமலால் திஸேரா ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு டி. சி. மல்லிகா குணதிலக என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் 2011.11.04 ஆந் திகதிய 445 ஆம் இலக்க அங்குறுவாதொட்ட, தெல்கொட, இல. 28/பி ஆம் இலக்க முகவரியில் வசிக்கும் பிலிப்பு மண்டடி கே பிதேலிஸ் எக்பர்ட் திஸேரா என்பவருக்கு என்னால் வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் 2014.12.11 ஆந் திகதியிலிருந்து இரத்துச்செய்து வலுவற்றதாக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

பிலிப்பு மண்டடி கே அலைக்சாண்டர் பிரேமலால் திஸேரா.

1-93

---

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வேயன்கொட, றுக்மலே, ஓபத்எல்ல, இல. 44 இல் வசிக்கும் உபுலி இன்திகா கஸ்தூரி ஆரச்சி (தேசிய ஆள் அடையாள அட்டை இல. 7881173628V) ஆகிய என்னால் புத்பிடிய, கினிகம, இல. 27 இல் வசிக்கும் மனமேன்திரகே இன்திக பத்மலால் மனமேன்திர (தேசிய ஆள் அடையாள அட்டை இல. 753211993V) என்பவருக்கு பிரசித்திபெற்ற நொத்தாரிசு என். எச். கே. ஜீ. பேர்ஸி த சில்வா அவர்களால் 2007 ஆம் ஆண்டு சனவரி மாதம் 8 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட 3196 ஆம் இலக்கத்தையுடைய அற்றோணித் தத்துவப்பத்திரத்தை இரத்துச்செய்து வெற்றும் வெறிதாக்குவதுடன் இதன் பிறகு அவரால் மேற்கொள்ளப்படும் எந்தவித கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்புக் கூற மாட்டேன் என்றும் இத்துடன் அறிவித்துக்கொள்கிறேன்.

உபுலி இன்திகா கஸ்தூரி ஆரச்சி.

1-166

---

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அவுஸ்திரேலியா தெற்கு, 5092, மொட்பரி ஹேட், லேடிவுட் வீதி, இல. 15/193 இல் வசிக்கும் கயா ஸமுதுனி கவுஷல்யா அட்டிகல்லே (கடவுச்சீட்டு இல. N2148470) ஆகிய என்னால் பொல்கஸ்ஓவிட, ஹொரேதுடுவ, இல. 14/சீ இல் வசிக்கும் ரஹால் குலப்பிரசாத் அட்டிகல்லே (தேசிய ஆள் அடையாள அட்டை இல. 861610918V) என்பவருக்கு 2013.10.04 ஆந் திகதியுடைய வெளிநாட்டு அற்றோணித் தத்துவப்பத்திரத்தை இரத்துச்செய்து வெற்றும் வெறிதாக்குவதுடன் இதன் பிறகு அவரால் மேற்கொள்ளப் படும் எந்தவித கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்புக் கூற மாட்டேன் என்றும் இத்துடன் அறிவித்துக்கொள்கிறேன்.

கயா ஸமுதுனி கவுஷல்யா அட்டிகல்லே.

1-167

---

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

அமெரிக்க ஐக்கிய இராச்சியம், என்வை 10016, நியூயோர்க், 12 ஆம் மாடி, மூன்றாம் அவெனியூ, 600 ஆம் இலக்க முகவரியைச் சேர்ந்த Stax Inc. ஆகிய நாங்கள் நியூயோர்க் மாநில பிரசித்த நொத்தாரிசு Kyle A Brodsky மற்றும் Massachusette கொமன்வெல்த் பிரசித்த நொத்தாரிசு Christine A Wennel ஆகியோரின் முன்னிலையில் கையொப்பமிடப் பட்டதும் 2010, திசெம்பர் 2 ஆந் திகதியிடப்பட்டதும் அர்ஜுன் குமார் விக்னராஜா மற்றும் ருவிந்து மீமண பீரிஸ் ஆகியோருக்கு என்னால் வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் 2014, ஒற்றோபர் 29 ஆந் திகதியிலிருந்து செயற்படும் வகையில் இத்தால் இல்லாதொழிக் கப்பட்டு, இரத்துச்செய்யப்பட்டுள்ளதெனவும் இது முதற்கொண்டு மேற்கூறப்பட்ட அற்றோணித் தத்துவம் செயலிழக்கச் செய்யப்பட்டு வெற்றும் வெறிதாக்கப்பட்டுள்ளதாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதென பொது அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

Stax Inc.

1-159

**அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

மொரட்டுவை, கட்டுபெத்த, சுற்றுலா டிப்போ வீதி, 260/16 ஆம் இலக்கத்தில் குடியிருக்கும் உங்காமண்டடிகே லிலி ஆனந்தராஜா (திருமணத்திற்கு முன்னர் பெர்ணாந்து) (தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் 377411404V) ஆகிய நான் மொரட்டுவை, லக்ஷபதிய, ஏர்னஸ்ட் பிரேஸ், 1 ஆம் ஒழுங்கை, இல. 5/1 இல் குடியிருக்கும் உங்கா மண்டடிகே உபாலி ரஞ்சித் பெர்ணாந்து தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் 433621141V) என்பவருக்கு பிரசித்த நொத்தாரிசு ஜீ. ஜீ. ஞானசிரி சில்வா அவர்களால் 2013, மாச்சு மாதம் 15 ஆந் திகதி எழுதி உறுதிசெய்யப்பட்ட 3701 ஆம் இலக்க அற்றோணித் தத்துவப்பத்திரத்தை எனது விருப்பத்தின் பேரிலும் அபிலாஷையின் பேரிலும் இத்தால் இரத்துச் செய்கிறேன். மேற்படி உங்கா மண்டடிகே உபாலி ரஞ்சித் பெர்ணாந்து என்பவர் இன்று தொடக்கம் புரியப்படும் ஏதேனும் நடவடிக்கைகளுக்கு நான் பொறுப்புக் கூற மாட்டேன் என இதன் மூலம் அறிவித்தல் தருகிறேன்.

உங்காமண்டடிகே லிலி ஆனந்தராஜா.

1-154

---

**அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

பிரசித்த நொத்தாரிசு டபிள்யு. எல். சுனில் பிரேமவர்தனவினால் 2001.04.30 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 9360 ஆம் இலக்க விசேட அற்றோணித் தத்துவத்தின் மூலம் நுகேகொடை, பாகொட வீதியின் 6 ஆம் ஒழுங்கையில் 9/37/10 ஆம் இலக்கம் கொண்ட இடத்தில் வதிவாகியிருந்து தற்போது மஹரகம, எல்ஹேன வீதியில் 83/1 ஆம் இலக்கம் கொண்ட இடத்தில் வதிவாகியுள்ள சிட்னி ஜோர்ஜ் அபேசுந்தர வீரசிங்ஹ என்பவருக்கு ஒப்படைக்கப்பட்ட அற்றோணித் தத்துவம் கூறப்பட்ட அற்றோணித் தத்துவம் 2014.12.17 ஆந் திகதி தொடக்கம் இரத்துச்செய்து செயல் வலுவற்ற தாக்கப்பட்டுள்ளதெனவும், கூறப்பட்ட அற்றோணித் தத்துவத்தில் அற்றோணி அதிபர்களான தெஹிவளை, புகையிரத நிலைய வீதியில் பீ. ரீ. த சில்வா மாவத்தையில் இல. 1/1 இல் வதிவாகியிருந்து தற்போது பிலியந்தலை, சுவாரபொல, சென். மிசல் வீதியில் 5/2 ஆம் இலக்கத்தில் வதியும் கொண்ஸ்ட்டன்ஸ் கெதரின் இஸபெல் வீரசிங்ஹ, சார்ள்ஸ் ருவன் விஜய வீரசிங்ஹ, டெனியல் அதுல கொண்ஸ்டன்டைன் வீரசிங்ஹ, பிரீதி விஜயன்தி நியோமி வீரசிங்ஹ, தயானி அனோமா சிசிலி வீரசிங்ஹ மற்றும் டேவிட் லின் சனத் வீரசிங்ஹ ஆகிய எம்மால் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கொண்ஸ்ட்டன்ஸ் கெதரின் இஸபெல் வீரசிங்ஹ,
சார்ள்ஸ் ருவன் விஜய வீரசிங்ஹ, டெனியல் அதுல
கொண்ஸ்டன்டைன் வீரசிங்ஹ, பிரீதி விஜயன்தி
நியோமி வீரசிங்ஹ, தயானி அனோமா
சிசிலி வீரசிங்ஹ மற்றும் டேவிட் லின் சனத் வீரசிங்ஹ.

1-161

---

# ஏல விற்பனைகள்

**கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ — பாணந்துறை கிளை**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் பீகியூ 116) மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம்–

**அட்டவணை**

**மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை நகரசபை எல்லையில் ஸ்ரீ ஞானரத்ன மாவத்தை, நன்னொருவ (வாட் இல. 4, உயன்கெல), நன்னொருவ வாட் இல. 5 மோதரவில) களுதாவெல (வாட் இல. 5 மோதரவில) வேகட (வாட் இல. 5, மோதர) இல் அமைந்துள்ள மோதரவில அருமுணகாவெல, கெட்டகெலவத்த மற்றும் அரமுணகாகும்புர எனும் காணிக்கு நிலஅளவையாளர் கே. பி. சந்திரசேகரவினால் தயாரிக்கப்பட்ட 1992.08.14 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 939 இல் காட்டப்பட்ட பகுதி படுத்திய துண்டான லொட் 15.**

**காணியின் விஸ்தீரணம் :**
**ஒரு ஏக்கர் பதினேழு தசம் ஒன்று ஆறு பேர்ச் (1ஏ. 0று. 17.16பே.)**

**இக்காணியில் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கை அதனகத்தேயுள்ள அனைத்தும் கீழ்விபரிக்கப்பட்ட பாதையும் சேர்த்து :**

**ஸ்ரீ ஞானரத்ன மாவத்தையில் அமைந்துள்ள மோதரவில, அரமுணகாவெல, கெட்டகெலகாவத்த மற்றும் அரமுணகா கும்புர காணியின் நில அளவையாளர் கே. பி. சந்திரசேகர 1992.08.14 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 939 இல் காட்டப்பட்ட துண்டான லொட் 5 (றோட்)**

**காணியின் விஸ்தீரணம் :**
**ஒரு ஏக்கர் முப்பத்தைந்து தசம் ஒன்பது ஒன்று பேர்ச் (1ஏ. 0று. 35.91பே.)**

(இலங்கை கம்பனிச் சட்டப்படி தாபிக்கப்பட்ட இலக்கம் 3, ஸ்ரீ குணரத்தன றோட், பாணந்துறை எனும் பதிவு விலாசத்தில் அமைந்துள்ள ஐ. ஈ. டெக்னிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் கடன் எடுத்து மேற்படி காணியை கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ இற்கு ஈடுவைத்துள்ளது.)

என்னால் மேற்சொல்லப்பட்ட காணியை அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் 2015, சனவரி மாதம் 29 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**– 2014.04.11 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 2014.09.24 ஆந் திகதியுடைய "லக்பிம", "த ஐலண்ட்" மற்றும் "வீரகேசரி" பத்திரிகைகளையும், ஏலவிற்பனை விளம்பரத்திற்காக 2015.01.02 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 2015.01.06 ஆந் திகதியுடைய "லக்பிம", "த ஐலண்ட்" மற்றும் "வீரகேசரி" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**காணியைச் சென்றடையும் விதம்.**– பாணந்துறை நகர மத்தியில் (மணிக்கூண்டுக்கு அருகில்) கொழும்பு–காலி பிரதான றோட்டில் காலிப் பக்கமாக 1.3 கி. மீ. தூரம் சென்று கைத்தொழில் வலயச் சந்திக்குச் சென்று இடதுபக்கம் உள்ள ஸ்ரீ ஞானரத்தன மாவத்தை ஊடாக 400 மீற்றர் சென்று இடதுபக்கம் உள்ள 30 அடி அகல நகரசபை றோட்டில் 250 மீற்றர் சென்று காணியை அடைய முடியும். இடதுபக்கம் உள்ளது. (இல. 45/5), கொரியன் ஸ்பா தொழிற்சாலைக்கு முன்பாக.

**கொடுப்பனவு செலுத்தும் விதம்.-** வெற்றி பெற்ற கொள்வன வாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சிமன்ற வரி 1% ;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5 % ;
(4) நொத்தாரிசு கட்டணம் 2,000 ரூபா ;
(5) இலிகிதர் கட்டணம் 500 ரூபா ;
(6) ஏலத்திற்காக செலவுசெய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் ;
(7) VAT வரி.

மிகுதி 90% ஏலத்திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பிரதான அலுவலகம் அல்லது பாணந்துறை கிளையில் செலுத்த வேண்டும்.

வேறு விபரங்களுக்காக.- முகாமையாளர், கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ, இல. 375, காலி றோட், பாணந்துறை. தொலைபேசி இல. : 038-2236808 ; தொலைநகல் இல. : 038-2234167.

எல். பி. சேனாநாயக்க (சமாதான நீதவான்),
முத்த உத்தரவுபெற்ற ஏலதாரர், விலைமதிப்பீட்டாளர்,
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 182,
3 ஆவது மாடி,
புதுக்கடை வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி/தொலைநகல் இல. 011-2445393.
மின்-அஞ்சல் : senaservice@sltnet.lk

1-157

---

**ஹட்டன் நஷனல் வங்கி ப.வ.க. – கல்முனை கிளை**
(முன்னர் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி என அறியப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை

**காணித்துண்டு (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ரீ. இளவரசு அவர்களால் தயாரிக்கப்பட்டு 2011.11.01 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. பி/213/2011 இல் குறிப்பிடப்பட்ட கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டம், கரைவாகுப்பற்று, கல்முனைப் பிரதேச செயலகத்தில் கடற்கரை பள்ளி வீதியில் அமைந்துள்ள காணியினது) அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து ஏல விற்பனை**

**(காணியின் விஸ்தீரணம்: 0ஏ. 0றூ. 7.34பே.)**

(கடப்பாடுடையவர்களான மொஹமட் அலியார் ராவியா உம்மா மற்றும் மொஹமட் இப்ராஹிம் கலிமுடீன் ஆகியோருக்கு அளிக்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹற்றன் நஷனல் வங்கி ப.வ.க. இற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள ஆதனம்)

